# MIN ALAI

# மின் அலை

June 2024 | Volume : 12 | Issue 6 | Price Rs. 18.00/- | Ann. Sub. Rs. 216/-




ஜூன் 22 மற்றும் 23ம் தேதி கன்னியாகுமரியில் நடைபெற்ற 56வது மாநில பொதுக்குழு.



தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்
பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொதுப் பொருளாளர் |
| --- | --- | --- |
| பொர்.A.அந்தோணிபடோவராஜ் | பொர்.V.S.சம்பத்குமார் | பொர்.N.R.செந்தில் |

ஆசிரியர்
பொர்.உ.ராஜேந்திரன்
9092687454

## ஆசிரியர் குழு

பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.N.R.செந்தில்
பொர்.S.ரவிசங்கர்
பொர்.S.செந்தில் முருகன்

| Page | Contents |
|---|---|
| 06 | 56வது மாநில பொதுக்குழு நிகழ்வு |
| 16 | பதவி உயர்வு |
| 17 | கிளை ஆண்டு பேரவைக் கூட்டங்கள் |

**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9499014992**

# மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 12 ஜுன் 2024 இதழ் 6

### "மின்சார வாரியத்தின் நிதித் தேவை!"

மின்சார வாரியத்தின் ஒவ்வொரு அசைவும் தமிழ்நாட்டு மக்களுடன் நேரடியாக தொடர்பு உடையது.

தமிழ்நாடு மின்சார வாரியமானது மற்ற பொதுத்துறை நிறுவனங்களைப் போல் அல்லாது வேறுபட்ட பரிமாணங்களை கொண்டது. 24 மணி நேரம் 365 நாட்களும் இயங்கிக் கொண்டு, நித்தம் நித்தம் வளர்ந்து கொண்டே இருக்கின்ற ஒரே துறை மின்வாரியம் ஆகும்.

தமிழகத்தில் நூறு விழுக்காடு தொழில்நுட்பப் பணிகளைக் மேற்கொள்ளும் துறை மின்சாரவாரியம் ஆகும்.

உயர்ந்து வரும் மின் நுகர்வுக்கு ஏற்றார் போல் மின்சாரவாரியம் தனது மின் கட்டுமானத்தை வளர்த்து கொண்டால் மட்டுமே அரசின் நோக்கமான, பொதுமக்களின் சேவைவை தங்கு தடையின்றி முழுமையாக அளிக்க முடியும்.

"தரமான மின்சாரம் மற்றும் 24 மணி நேரமும் தடையில்லா மின்சாரம்"– என்பது தான் தமிழக மக்களின் எதிர்பார்ப்பும் அரசின் கொள்கையும் கூட.

இதனை செவ்வனே நிறைவேற்றிட நித்தம் வளர்ந்து வரும் மின்சுமையை தாங்கி ஏற்று திறம்பட செயல்படக்கூடிய மின் கட்டமைப்பை வலுப்படுத்தும் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்திட வேண்டும். நிதிநிலையை காரணம் காட்டி இதனை தாமதிப்பதால் தடையற்ற மின்சாரம் வழங்குவது தடைபட்டு போகும். மேலும் இருக்கும் மின் உபகரணங்களும் உயர்மின் பளுவின் காரணமாக பழுதடைவதும் ஏற்படும். இது மின்வாரியத்தின் நஷ்டத்திற்கு மேலும் வித்திடும்.

மின்சார வாரியம், புதிய வளர்ச்சித் திட்டங்களும், அதனை நிறுவிட போதிய தொழில்நுட்ப திறனும் தன்னகத்தே பெற்றிருந்தாலும் கூட..... வளர்ச்சித் திட்டங்களை தேவையான காலத்தில் கட்டுமானம் செய்து செயல்பாட்டுக்கு கொண்டுவர உடனடி நிதித் தேவை அத்தியாவசியமாகிறது.

தமிழக அரசின் நோக்கத்தையும், தமிழக மக்களின் எதிர்பார்ப்பையும் நிறைவேற்றும் பொருட்டு, பல்வேறு சமூக நலத்திட்டங்களை தமிழக அரசின் நோக்கத்திற்கு ஏற்றபடி முழுமையாக மின்சார வாரியம் நிறைவேற்றி வருவதின் காரணமாக மின்வாரியத்தின் கட்டமைப்புக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஆகவே தமிழக அரசு மின்வாரியத்தின் கட்டமைப்பு திட்டங்களுக்கான போதிய நிதித் தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்து மின் கட்டமைப்பினை மேம்படுத்தினால் தான் மின்வாரியத்தின் சேவை, தங்கு தடையின்றியும், அவசிய அவசர தேவையான காலத்தில் ஸ்திரமாகவும் இருக்கும்.

தமிழகத்தில் வளர்ந்து வரும் மின் தேவையை கருத்தில் கொண்டு நடப்பில் உள்ள மின் உற்பத்தித் திட்டங்களை விரைவு படுத்திடவும், மின் கட்டமைப்பினை மேம்படுத்திடவும், புதிய மின் வழித்தடங்களையும் துணை மின் நிலையங்களையும் நிறுவிடவும் உரிய நிதியினை தமிழக அரசு தலையிட்டு உடனே ஒதுக்கினால் மட்டுமே பொதுமக்களுக்கான சேவை சுணக்கமின்றி நிறைவேறும் என்பதை அரசு உணர்ந்திட வேண்டிய தருணமிது.

“செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்” – குறள்

## பொதுச் செயலாளர் கடிதம்



அன்பு பொறியாளர்களே!

வணக்கம்.

பொறியாளர் சங்கத்தின் 56வது மாநில பொதுக்குழு கூட்டம் கடந்த ஜூன் 22 மற்றும் 23 தேதிகளில் கன்னியாகுமரியில் சிறப்பாக நடைபெற்றது. சிறப்புமிக்க பொதுக்குழு கூட்டத்திற்கு, நெல்லை மண்டல கிளைகளின் பொறுப்பாளர்கள் நேர்த்தியாக அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். திருநெல்வேலி மண்டலத்தில் உள்ள பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த 56வது பொதுக்குழுவில் பல கிளைகளின் இளைய பொறுப்பாளர்கள் ஆர்வமுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் கலந்துகொண்டு ஆரோக்கியமாக விவாதங்களில் பங்கேற்றது மகிழ்ச்சியளிக்கிறது.

இந்த வளரும் இளம் தலைமுறையினர், சங்கத்தை எதிர்காலத்தில் மிகச் சிறப்பாக வழிநடத்துவார்கள் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது. வரும் ஆண்டில் பொறுப்பாளர்கள் அனைவரும் மிகச் சரியான திட்டமிடலுடன் செயலாற்றிட வேண்டுகிறேன். புதிய உறுப்பினர்கள் சேர்க்கை, காமதேனு நலநிதி உறுப்பினர் சேர்க்கை, உறுப்பினர்களின் குறைகளை தீர்த்தல், கிளைகளில் திட்டமிட்ட பேச்சுவார்த்தை, மாதாந்திர செயற்குழு கூட்டங்கள் நடத்துதல் ஆகியவற்றில் சிறந்த அணுகுமுறையுடன் செயலாற்றிட முடிவெடுக்கப்பட்டது. உறுப்பினர்களும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டுகிறேன்.

பணி மூப்பின் காரணமாக மின்வாரிய பணியிலிருந்து ஓய்வு பெற்று, தற்போது இப்பொதுக்குழுவில் சங்கப்பணியிலிருந்தும் ஓய்வு பெற்ற பொர்.G.கார்த்திகேயன் பொதுப்பொருளாளர், பொர்.ரெமிங்டன்.V.ராயன் செயலாளர்/ அமைப்பு, பொர்.C.ருத்ரகுமார் செயலாளர்/ நிர்வாகம், பொர்.C.சிவசங்கரன் செயலாளர்/ கோவை மண்டலம் அவர்களுக்கு பொதுக்குழுவில் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டது. இந்த நான்கு பொறுப்பாளர்களும் 30 ஆண்டுகளுக்கு மேலாக பொறியாளர் சங்கத்தில் பொறுப்பாளர்களாக செயல்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. இப்பொறுப்பாளர்கள் அனைவருக்கும் பொறியாளர் சங்கத்தின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

உதவி செயற்பொறியாளர்/ மின்னியல் பதவி உயர்விற்கான PAR படிவங்கள் 63 பொறியாளர்களுக்கு கிடைக்கப்பெறவில்லை. அனைவருக்கும் நினைவூட்டல் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுபட்ட தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

செயற்பொறியாளர் /மின்னியல் பதவி உயர்வில் அனுமதிக்கப்பட்ட பட்டியலில் மீதமுள்ள 8 உதவி செயற்பொறியாளர்களுக்கு செயற்பொறியாளர்/ மின்னியல் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இளநிலை பொறியாளர்/ இயந்திரவியல் நிலை–II க்கான பதவி உயர்வு 2 பொறியாளர்களுக்கு கடந்த 10.06.2024 தேதியில் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தொழில்நுட்ப உதவியாளர்/ இயந்திரவியல் வாரிசுப்பணி நியமனத்திற்கு காத்திருக்கும் முதல் இரண்டு நபர்களுக்கு (பணியாளர்களின் வாரிசுகளுக்கு) பணிநியமன உத்தரவு வழங்கிட முறையீடு செய்யப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப உதவியாளர்/ மின்னியல் உள்முகத் தேர்வு விண்ணப்பங்களின் தகவல்கள் சரிபார்ப்பு பணி நடைபெற்று வருகிறது. இளநிலைப் பொறியாளர்/ இரண்டாம் நிலை/ சிவில் உள்முகத்தேர்வின் விண்ணப்பதாரர்களின் 6 நபர்களுக்குரிய தகவல்கள் மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்கள் வாயிலாக கிடைக்கப் பெறவில்லை, கிளை பொறுப்பாளர்களுக்கு தகவல்களை உடனடியாக அனுப்பிட ஆவண செய்திட நினைவூட்டப்பட்டுள்ளது. தகவல்கள் முழுமையாக கிடைக்கப்பெற்றதும் பதவி உயர்வு உத்தரவுகள் எதிர்பார்க்கப்படுகிறது.

இளநிலை பொறியாளர்/ முதல் நிலை/ மின்னியல் பதவி உயர்விற்கு தகுதியான பொறியாளர்களிடமிருந்து தகுதி காண் பட்டியல் கோர தொடர்ந்து வாரியத்தலைவர் மற்றும் தலைமைப்பொறியாளர் பணியமைப்பு ஆகியோரிடம் முறையீடுகள் வாயிலாக வலியுறுத்தப்பட்டுள்ளது. விரைவில் Call for செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

07.03.2024 அன்று மின் உற்பத்தியை துவக்கிய, நமது மின்வாரியத்தின் சொந்த மின் உற்பத்தி உயர்வின் ஒரு மைல்கல்லான வடசென்னை அனல் மின்நிலையம்–III 27.06.2024 அன்று தனது முழு உற்பத்தி திறனான 800 மெ.வா விற்கு தொடர்ந்து இயக்கப்பட்டது. நீண்ட நாட்களுக்கு பிறகு, இயற்கை வளியின் அபரிதிமான விலை உயர்வால், வாயு மின் உற்பத்தி குறைந்துவரும் இவ்வேளையில், இந்த அனல் மின்நிலையம் தனது முழுகொள்ளளவில் உற்பத்தியை தொடங்கியது நமக்கு சிறிய மகிழ்ச்சியை தருகிறது.

மேலும் தற்போது நடைமுறையில் உள்ள 4900 மெ.வா அனல் மின் நிலையங்களும், 520 மெ.வா புனல் மின் நிலைய திட்டங்களுக்கு உரிய நிதி வழங்கப்பட்டு விரைவாக முடிக்கப்பட்டால், வாரிய நிதிநிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படுவதோடு மின் உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி பயணிக்கும்.

தற்போது ETPS Expansion Project (1 x 660MW) மற்றும் Uppur Thermal Power project (2x800 MW) அகியவற்றை PPP (Public Private Patnership) முறையில் நிறுவிட அரசு சாத்தியகூறுகளை ஆராய்ந்து வருகிறது.

மின்சார வாரியம் பல மாற்றங்களை முன்னெடுக்க தயாராகி வருகிறது.

விழிப்புடன் இருப்போம் . . . , மின்வாரிய நலன் காப்போம் . . .

நன்றி

பொர்.V.S.சம்பத்குமார்
பொதுச் செயலாளர்

---

## <u>மணந்தனர் வாழ்த்துகிறோம்</u>

மணமகன்
**திரு. T.இராமசுந்தரம்** ( Retd survey Inspector)
**திருமதி. R.பொன்னம்மாள்**
ஆகியோரின் மகன் திருநிறைச்செல்வன்
**R.மணிகண்டன்** B.E.
( Athri Farm and solar)



மணமகள்
**திரு. G.ஜோதிமணி** B.E.
**திருமதி. J.மகாலட்சுமி**
ஆகியோரின் மகள் திருநிறைச்செல்வி
**J.சங்கீதா** JE II
கங்கைகொண்டாள் து.மி.நி / திருநெல்வேலி கிளை

**சுபமுகூர்த்தம் :** 09.06.2024

**இடம் : சமூகநலக்கூடம், திருச்சிற்றம்பலம், தென்காசி**

**மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

**மின் அலை வளர்ச்சி நிதி ரூபாய் 500/- பொர்.J.சங்கீதா** JE II **அவர்கள் அளித்துள்ளார், நன்றி.**

# சங்கத்தின் 56வது மாநில பொதுக்குழு கூட்டம்

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் 56 வது மாநில பொதுக்குழு கூட்டம் 22.06.2024 மற்றும் 23.06.2024 ஆகிய இரண்டு தேதிகளில் கன்னியாகுமரியில், சக்தி மஹாலில், பொர்.A.அந்தோணி படோவராஜ், மாநில தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

22.06.2024 அன்று காலை 10.30 மணிக்கு பொதுக்குழு கூட்டம் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது. கடந்த ஆண்டில் மறைந்த சங்க முன்னாள் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோருக்கு இரங்கல் செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து நெல்லை மண்டலச் செயலாளர் பொர்.R.முருகன் வரவேற்புரை ஆற்றினார்.

மாநில தலைவர் பொர்.A.அந்தோணி படோவராஜ் அவர்கள் தலைமை உரை நிகழ்த்தினார். அவரது உரையில் 2017ஆம் ஆண்டு ஒரு இக்கட்டான காலகட்டத்தில் நெல்லையில் நடைபெற்ற மாநில பொதுக்குழுவிற்கு பின் மீண்டும் நெல்லை மண்டலத்தில் இந்த பொதுக்குழு கூடுவதை நினைவு கூர்ந்தார். 08.12.2013 அன்று கன்னியாகுமரியில் நடைபெற்ற இடைக்கால பொதுக்குழுவை முன்னின்று நடத்திய அன்றைய மாநில துணைத் தலைவர் பொர்.ரெமிங்டன்.V.ராயன் அவர்களும், அன்றைய நெல்லை மண்டலச் செயலாளர் பொர்.S.மணிவாசகன் அவர்களும் இந்த பொதுக்குழுவையும் முன்னின்று நடத்துவது பெருமைக்குரியது என்றார்.

மேலும் அவர் பேசுகையில் 16.05.2023 அன்று ஏற்படுத்தப்பட்ட மிகச் சிறப்பான ஊதிய உயர்வு ஒப்பந்தத்தையும் அதில் சங்கத்தின் சிறப்பான பங்கையும் எடுத்துரைத்த அவர், அதற்கு பிறகு வாரியம் CLASS I &II அலுவலர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு உள்ளது போல் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே ஊதிய உயர்வு வழங்க முடியும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதை சுட்டி காட்டினார்.

10 வருடங்களுக்கு மேலாக கிடப்பில் கிடந்த முத்தரப்பு ஒப்பந்தம் மீண்டும் உருப்பெற்று கடந்த 12.02.2024 நிறைவேறியதும், அதில் சங்கம் முன்வைத்த முக்கிய திருத்தங்களும், அந்த திருத்தங்கள் ஒப்பந்தத்தில் திருத்தப்பட்டதும், சங்கத்தின் சாதனை என்றும் அது அனைத்து பணியாளர்களாலும் பாராட்டப்பட்டது என்றும், அதற்கு தகுந்த ஆலோசனை வழங்கிய மூத்தப் பொறுப்பாளர்கள் மற்றும் AIFOPDE பொறுப்பாளர்கள் அனைவருக்கும் தன் நன்றியை தெரிவித்தார்.

TANGEDCO வை மேலும் பிரித்த அரசாணை 6, 7 ஆகியவற்றை பற்றியும் அதன் காரணமாக TNGECL க்கு புதிய மேலாண்மை இயக்குனர் நியமிக்கப்பட்டுள்ளதையும் சுட்டிகாட்டிய மாநில தலைவர், வாரியத்தின் கட்டமைப்பை பாதிக்கும் BP4 உத்தரவு குறித்தும் விரிவாக கூறினார். தொழில் நுட்ப உதவியாளர் முதல் மேற்பார்வை பொறியாளர் வரை அனைத்து நிலைகளிலும் பதவி உயர்வுகளை சங்கம் பெற்றதையும் அதற்காக உழைத்த பொதுச்செயலாளர் மற்றும் தலைமை நிலையத்தில் உள்ள அனைத்து பொறுப்பாளர்களுக்கும் தன் பாராட்டினை தெரிவித்தார்.

திருவாரூர் மற்றும் தருமபுரி கிளைகளில் மின் வாரியம் ஒதுக்கிய இடத்தில் சங்கதிற்கு கட்டிடம் கட்டப்பட்டதை பாராட்டிய மாநில தலைவர் மற்ற கிளைகளும் சங்கதிற்கு கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பொதுக்குழு உறுபினர்கள் அனைவரும் இந்த இரண்டு நாள் பொதுக்குழுவில் கட்டுப்பாட்டுடன் ஆக்கபூர்வமாக பங்குகொள்ள வேண்டும் என்ற அறிவுரையோடு தன் உரையை நிறைவு செய்தார்.

தொடர்ந்து பொதுச் செயலாளர் பொர்.V.S.சம்பத்குமார் பொதுக்குழுவிற்கு தனது அறிக்கையை சமர்ப்பித்துப் பேசினார்.

பொதுக்குழுவில் முதல்முறையாக பங்கேற்கும் பொதுக்குழு உறுப்பினர்களுக்கும் தன் வாழ்த்துகளை தெரிவித்த அவர், மிகச் சிறப்பாக பொதுக்குழுவை ஏற்பாடு செய்துள்ள நெல்லை மண்டல பொறுப்பாளர்களை வெகுவாக பாராட்டினார். கடந்த ஆண்டு தொழில் நுட்ப உதவியாளர் முதல் மேற்பார்வை பொறியாளர் வரை 1254 பதவி உயர்வுகளை சங்கம் பெற்றதையும், வேறு யாரும் செய்ய முடியாத சாதனையை சங்கம் செய்துள்ளது என்று பெருமையுடன் கூறிய அவர், இதற்காக வழிகாட்டிய மாநில தலைவர், உறுதுணையாக இருந்த அனைத்து மத்திய பொறுப்பாளர்களுக்கும் தன் நன்றியை தெரிவித்தார். இந்த இக்கட்டான சூழலிலும் சங்கம் பெற்றுள்ள பதவி உயர்வுகள் வரலாற்று சிறப்பு மிக்கது என்று கூறிய அவர், இந்த சாதனை சங்கத்தின் பாரம்பரிய செயல்கள் என்றும் அதற்கு ஆலோசனை வழங்கிய மூத்த பொறியாளர்கள் உள்ளிட்ட அனைவரையும் நினைவு கூர்வதாகவும் தெரிவித்தார்.

பதவி உயர்வுகள் குறித்து பேசிய பொதுச் செயலாளர் அவர்கள், தொழில் நுட்ப உதவியாளர்/ மின்னியல் (உள்முகத்தேர்வு) சங்கத்தின் சீரிய முயற்சியால் அனுமதி பெறப்பட்டு பல்வேறு இடர்பாடுகளை கலைந்து தற்போது call for செய்யப்பட்டுள்ளது, நாம் எதிர்பார்த்ததை தாண்டி கூடுதலாக விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன, விண்ணப்பங்கள் சரிபார்க்கும் பணி நடந்து வருகிறது, பதவி உயர்வுகள் விரைந்து பெற நடவடிக்கை எடுக்கப்படும். அதைபோல் இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை/ சிவில் (உள்முகத்தேர்வு) 2016ஆம் ஆண்டிற்கு பிறகு வழங்கப்படாததை வாரியத்திடம் தொடர் முறையீடு செய்ததன் பலனாக தற்போது call for செய்யப்பட்டுள்ளது என்று கூறினார்.

மேலும் அவர் கூறுகையில் இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை/ மின்னியல் பதவி உயர்வுகள் சங்கத்தின் இடைவிடாத முயற்சியால் பல்வேறு தடைகளை தாண்டி, சில தொழிற்சங்கங்களின் தடைகளையும் கடந்து மிகப் பெரிய சாதனையாக கடந்த 14.03.2024 அன்று 542 தொழில்நுட்ப உதவியாளர்களுக்கும், 181 பட்டயமல்லாதோருக்கும் பெறப்பட்டதை விரிவாக எடுத்துக்கூறினார். இதனை தொடர்ந்து சங்க முறையீட்டால் கடந்த 24.05.2024 அன்று 915 தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு தகுதிக்காண் அறிக்கை கோரப்பட்டுள்ளதை சுட்டிகாட்டினார்.

மேலும் இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை/ இயந்திரவியல் பதவி உயர்வுகள் தொடர் முறையீடுகள் மூலம் 14 பொறியாளர்களுக்கு பெற்று தரப்பட்டது என்றும் தெரிவித்தார்.

இளநிலை பொறியாளர் முதல் நிலை/ மின்னியல் பதவி உயர்வில் சங்கத்தின் மாராத்தான் முயற்சி பெருமைப்பட வேண்டியது. சங்கத்தின் முயற்சியால் கடந்த 13.01.2023 அன்று 658 நபர்களுக்கு பதவி உயர்வுக்கு பட்டியல் அனுமதிக்கப்பட்டு அதில் 580 பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. மீதமுள்ள பொறியாளர்களுக்கும் பதவி உயர்வுகள் வழங்கிட தொடர்ந்து எடுத்த முயற்சியால் கடந்த 09.01.2024 அண்டு 77 பொறியாளர்களுக்கும் பதவி உயர்வு பெறப்பட்டது எனவும் தெரிவித்தார்.

இளநிலை பொறியாளர் முதல் நிலை/ இயந்திரவியல் பதவி உயர்வு பெற தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உதவி செயற்பொறியாளர்/ மின்னியல் பதவி உயர்வுகள் சங்கத்தின் தொடர் முயற்சியால் கடந்த 13.10.2022 அன்று 317 நபர்களுக்கு பதவி உயர்வுகள் அனுமதிக்கப்பட்டு அவை வெவ்வேறு தேதிகளில் பெறப்பட்டது. தற்போது 349 நபர்களுக்கு உதவி செயற்பொறியாளர்/ மின்னியல் பதவி உயர்வுக்கு தகுதி காண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. உதவி செயற்பொறியாளர்/ இயந்திரவியல் பதவி உயர்வுகள் சங்க முறையீட்டால் 33 பொறியாளர்களுக்கு கடந்த 05.03.2024 அன்று பெறப்பட்டது. அதைபோல் உதவி செயற் பொறியாளர்/ சிவில் பதவி உயர்வுகள் சங்க முறையீட்டால் 9 பொறியாளர்களுக்கு கடந்த 14.03.2024 அன்று பெறப்பட்டது என்றும் தெரிவித்தார்.

செயற்பொறியாளர்/ மின்னியல் பதவி உயர்வுகள் சங்கம் வாரியத் தலைவரிடம் செய்த தொடர் முறையீடுகளால் பல்வேறு தடைகளை கடந்து 15.3.24 அன்று 50 நபர்களுக்கு பதவி உயர்வுகள் பெறப்பட்டது. செயற்பொறியாளர்/ இயந்திரவியல் 29.02.2024 அன்று 9 பொறியாளர்களுக்கு பட்டியல் அனுமதிக்கப்பட்டு அதில் 8 நபர்களுக்கு 15.03.2024 அன்று செயற்பொறியாளர் பதவி உயர்வு பெறப்பட்டது என தெரிவித்தார்.

உதவி பொறியாளர்/ REDESIGNATION பட்டக்கல்வி முடித்து இளநிலை பொறியாளர்/ முதல் நிலையாக பணியாற்றி வரும் பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பெயர் மாற்றம் (AE/ REDESIGNATION) விண்ணப்பங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமல் பணியமைப்பு நிர்வாகம் நீண்ட காலமாக தாமதப்படுத்தியதை உரிய முறையீடுகள் செய்து, தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உதவி பொறியாளர் (உள்முகத்தேர்வு) மின்னியல்/ இயந்திரவியல்/ சிவில் ஆகிய பதவிகளுக்கு சங்கத்தின் தொடர் முயற்சியால் விண்ணப்பங்கள் கேட்கப்பட்டு, தற்போது அவற்றை சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது என்றும் தனது அறிக்கையில் தெரிவித்தார்.

நீதிமன்ற வழக்குகள் பற்றி விரிவாக பேசிய பொதுச் செயலாளர், வாரியத் தலைவருடனான பேச்சுவார்தைகள் குறித்தும் விளக்கினார். சங்கத்தின் சீரிய முயற்சியால் மட்டுமே DELEGATION OF POWER, ENHANCEMENT OF IMPREST AND PASS ORDER ஆகியவை சாத்தியமாயின என்றும், கூட்டுக்குழுவில் சங்கத்தின் பங்கினையும், அதன் தற்போதைய நிலையினையும் கூறிய அவர், முத்தரப்பு ஒப்பந்தம் கடந்து வந்த பாதையினையும், அதில் பொறியாளர் சங்கத்தின் தொடர் ஈடுபாடும், மறைந்த நம் முன்னாள் பொதுச் செயலாளர் பொர்.V.அசோக்குமார் அவர்கள் பத்து ஆண்டுகளுக்கு முன்பே முத்தரப்பு ஒப்பந்தத்தில் அவரின் பங்களிப்பும் நினைவு கூற தக்கது, இன்றைய நிலையில் ஒப்பந்தம்

நிறைவேற்றப்படும் சூழலில் சங்கத்தின் மூத்த பொறுப்பாளர்கள், AIFOPDE தலைவர்கள், மத்திய பொறுப்பாளர்களின் ஆலோசனைபடி சில முக்கிய திருத்தங்களை முத்தரப்பு ஒப்பந்தத்தில் சேர்க்க வலியுறுத்தி, அதில் வெற்றியும் பெற்று சங்கம் கையெழுத்திட்டது வரலாற்று சிறப்பு மிக்கது என்றார்.

இரத்ததான முகாம், காமதேனு நலநிதித்திட்டம் ஆகியன குறித்து பேசிய பொதுச் செயலாளர், TNEBRES சங்கத்தின் செயல்பாடுகளை வெகுவாக பாராட்டினார். பொதுச் செயலாளராக சிறப்பாக பணிபுரிய உதவிட்ட அனைத்து பொறுப்பாளர்களுக்கும் தனித்தனியே நன்றி கூறி தன் உரையை நெகிழ்ச்சியுடன் நிறைவு செய்தார்.

உணவு இடைவேளைக்கு பின் பொதுப் பொருளாளர் பொர்.G.கார்த்திகேயன் அவர்கள் 2023–24 ஆம் ஆண்டு வரவு செலவு அறிக்கையினை அவைக்கு தாக்கல் செய்து பேசினார்.

ஆண்டு சந்தா மற்றும் ஆண்டு நன்கொடைகள் அனைத்து கிளைகளிலும் தவறாமல் பிடித்தம் செய்யப்படுவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அவர், மற்ற WR DONATION, PROMOTION DONATION ஆகியவற்றை அனைவரிடம் இருந்தும் பெற வேண்டும் என்று வலியுறுத்தினார். எதிர்கால நீதிமன்ற வழக்குகளை எதிர்கொள்ள சங்கதிற்கு அதிக நிதி தேவை என்பதால் சங்கத்தின் பொருளாதாரம் வலுவாக இருப்பது அவசியம் என்றார். சங்கத்தின் பதிவு மற்றும் அங்கீகாரத்தை நிலை நிறுத்திட கிளைகள் மாதந்தோறும் வரவு செலவு கணக்குகளை மைய அமைப்பிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். தான் சிறப்பாக பணிபுரிய உதவிட்ட அனைத்து பொறுப்பாளர்களுக்கும் தனித்தனியே நன்றி கூறி தன் உரையை மன நிறைவுடன் நிறைவு செய்தார்.

அடுத்து மின் அலை வெளியீட்டு செயலாளர் பொர்.R.சந்தோஷ்குமார் அவர்கள் அறிக்கையினை அவைக்கு சமர்ப்பித்துப் பேசினார்.

கடந்த ஆண்டில் எப்போதும் போல் மின் அலை சங்க செய்திகள் அனைத்தையும் தாங்கி வெளிவந்ததையும், அது பொறியாளர்களின் பொக்கிஷம் என்றும் கூறினார். சங்கச் செய்திகள் மட்டுமின்றி உறுப்பினர்களின் அனைத்து செய்திகளையும் பிரசுரிக்கும் மின் அலை, தன்னம்பிக்கை ஊட்டும் பல்வேறு கட்டுரைகளை பிரசுரிப்பது, சங்க உறுப்பினர்களை தாண்டி எல்லோராலும் பாராட்டப்படுவதை எடுத்துரைத்தார். மின் அலை மேலும் பொலிவு பெற உறுப்பினர்கள் ஆதரவு தேவை என வேண்டுகோள் வைத்து தன் உரையை நிறைவு செய்தார்.

அடுத்து காமதேனு நலநிதி செயலாளர் பொர்.N.R.செந்தில் அவர்கள் நல நிதி அறிக்கையினை அவைக்கு தாக்கல் செய்து பேசினார்.

காமதேனு நலநிதி சங்கத்தின் முதுகெலும்பு என்றும் சங்கத்தின் நல நிதி உறுப்பினர் இறந்துவிட்டால் விரைந்து அந்த குடும்பத்தின் இழப்பினை நலநிதியால் ஓரளவு முதலில் ஆறுதல் சொல்லுவது சங்கம் மட்டுமே என்றும், நலநிதியின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். KBF VI திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற 3000 உறுப்பினர்களை கிளைகள் விரைந்து சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு தன் உரையை நிறைவு செய்தார்.

மேற்கண்ட அனைத்து அறிக்கைகள் மீதும் தங்கள் கருத்துக்களை கீழ் கண்ட பொதுக்குழு உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டு பேசினார்கள்.

பொறியாளர்கள் R.தணிகைசெல்வன்/ திருப்பத்தூர், C.சுப்பிரமணி/ திண்டுக்கல், R.S.சுமின்ராஜ்/ கன்னியாகுமரி, U.ராஜேந்திரன்/ சென்னை வளர்ச்சி வட்டம், K.முத்துகிருஷ்ணன்/ புதுக்கோட்டை, S.முருகன்/ விழுப்புரம், B.பழனிகுமார்/ விருதுநகர், P.நட்டார் ராஜா / TTPS, K.சரவணன்/ காடம்பாறை, S.பஞ்சநாதன்/ தஞ்சாவூர், M.ரெங்கசாமி/ கள்ளக்குறிச்சி, E.இசக்கி பாண்டி/ திருநெல்வேலி, V.சங்கர் கணேஷ்/ திருச்சி, S.நல்லமுத்து/ கோபி, A.அசோக்குமார்/ சிவகங்கை, R.பால கிருஷ்ணன்/ NCTPS, M.இளவழகன்/ கடலூர், C.ராஜா/ நாமக்கல், K.ஞானபிரகாசம்/ கோவை, M.வெங்கட கார்த்திகேயன்/ MTPS, P.ருத்ராபதி/ பெரம்பலூர், K.சங்கர்/ செங்கை, R.மைகேல்ராஜ்/ தூத்துக்குடி, K.கார்த்திகேயன்/ சென்னை மேற்கு, ஆகியோர் விவாதத்தில் பங்கேற்று தங்களின் கருத்துக்களை தெரிவித்தனர்.

உறுப்பினர்களின் சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு பொதுச் செயலாளர் மற்றும் பொதுப் பொருளாளர் ஆகியோர் பதிலளித்து பேசிய பின் அனைத்து அறிக்கைகளும் பொதுக்குழுவால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கு பின்னர் 2024–25 ஆம் ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள் தேர்வு நடைபெற்றது. புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். இத்துடன் பொதுக்குழு முதல்நாள் நிகழ்வுகள் நிறைவுற்றது.

## இரண்டாம் நாள் நிகழ்வுகள்

23.06.2024 அன்று காலை 8.30 மணிக்கு மையப்பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது. அதில் பொதுக்குழுவில் முன்மொழிய வேண்டிய தீர்மானங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இரண்டாம் நாள் பொதுக்குழு காலை 10.30 மணிக்கு துவங்கியது, மாநில தலைவர் அவர்கள் இரண்டாம் நாள் நிகழ்வில் பொதுக்குழு எடுக்க வேண்டிய முடிவுகள் குறித்து பேசினார். தொடர்ந்து பேசிய பொதுச் செயலாளர் காலையில் நடைபெற்ற மையப்பொறுப்பாளர்கள் கூட்டம் குறித்தும், அதில் விவாதிக்கப்பட்டவை குறித்தும் அவைக்கு தெளிவாக எடுத்துரைத்தார். மையப்பொறுப்பாளர்கள் கூட்டம் பரிந்துரை செய்த தீர்மான வரைவை அவைக்கு தாக்கல் செய்த அவர், இதன் மீதான கருத்துக்களும், மேலும் வேறு தீர்மானங்கள் இருந்தால் அது குறித்தான கருத்துகளையும் வேண்டினார்.

தொடர்ந்து பேசிய செயலாளர் / அமைப்பு முனைவர் சா.சம்பத், AIFOPDE தென் மண்டல தலைவர் அவர்கள், கடந்த ஆண்டில் சங்கம் அங்கம் வகிக்கும் AIFOPDE யின் செயல்பாடுகள் குறித்தும், வரும் காலங்களில் மின்சார சட்ட திருத்த மசோதா குறித்தும் அதில் AIFPODE பங்கு குறித்தும் விரிவாக பேசினார்.

பொதுப் பொருளாளர் பொர்.N.R.செந்தில் அவர்கள் சங்க நிதி நிலையினை மேம்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பொதுக்குழுவிற்கு விளக்கினார்.

தொடர்ந்து பொதுச் செயலாளர் தாக்கல் செய்த தீர்மானங்கள் மீதும், புதிய தீர்மானங்களை வலியுறுத்தியும் கீழ்கண்ட பொதுக்குழு உறுபினர்கள் பேசினார்கள்.

பொறியாளர்கள் D.சபரிநாதன்/ நாகை, T.இளையராஜா/ கிருஷ்ணகிரி, S.நல்லமுத்து/ கோபி, A.அருள்சரவணன்/ வேலூர், R.பாபு/ செங்கல்பட்டு, B.சதீஷ்/ சென்னை மேற்கு, S.கனகராஜ்/ சென்னை தெற்கு, M.ஜான் பிரிட்டோ/ திண்டுக்கல், U.ராஜேந்திரன்/ CDC, S.முருகன்/ விழுப்புரம், K.சுரதா/ தூத்துக்குடி, N.கார்மேகம்/ ராமநாதபுரம், G.கதிர்வேல்/ மதுரை, S.சுரேஷ்ராஜ்/ திருப்பத்தூர், P.கமல்குமார்/ கோவை, S.துரைராஜ்/ தேனி, S.கார்த்திகேயன்/ சேலம், R.ஜெகதீஷ் கிருஷ்ண செல்வன்/ திருநெல்வெலி, P.முரளி/ தர்மபுரி, G.கோபி/ கரூர், R.நடராஜன்/ திருவண்ணாமலை, E.ஆனந்தன்/ சென்னை வடக்கு, A.லட்சுமி நரசிம்மன்/ திருச்சி, ஆகியோர் பேசினர்.

விவாதத்திற்கு பின் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன

1. தமிழ்நாடு மின்சாரவாரிய பணியாளர்களின் பணி பாதுகாப்பு மற்றும் பணபயன்களை உறுதி செய்யும் அரசு உத்தரவாதத்துடனான முத்தரப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் இப்பொதுக்குழு நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.
2. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தை மூன்று நிறுவனங்களாக பிரித்த பிறகு, தமிழக சட்டசபையில் மின்துறை பொதுத்துறை நிறுவனமாகவே தொடர்ந்து செயல்படும் என்பதை அரசின் கொள்கை முடிவாக அறிவித்ததை வரவேற்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கும் இப்பொதுக்குழு, பாராட்டையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறது.
3. மின்சார வாரிய பணியாளர்களின் பணி பாதுகாப்பு மற்றும் பணப் பயன்களை உறுதி செய்யும் அரசு உத்திரவாதத்துடனான முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்பட முனைப்புடன் செயல்பட்ட மரியாதைக்குரிய மின்வாரிய தலைவர் அவர்களுக்கும், மின்வாரிய செயலாளர், இயக்குனர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் இப்பொதுக்குழு நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.
4. மின்சார வாரிய பணியாளர்களின் பணி பாதுகாப்பு மற்றும் பணபயன்களை உறுதி செய்யும் அரசு உத்திரவாதத்துடனான முத்தரப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்திட ஒத்துழைப்பு நல்கிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழுவில் அங்கம் வகிக்கும் அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் நன்றியை இப்பொதுக்குழு தெரிவித்துக் கொள்கிறது.
5. தமிழகத்தில் வளர்ந்து வரும் மின் தேவையை கருத்தில் கொண்டு, நடப்பில் உள்ள மின் உற்பத்தி திட்டங்களை (On Going Projects) விரைவுப்படுத்திடவும், மின் கட்டமைப்பினை மேம்படுத்திடவும், புதிய மின் வழித்தடங்கள், துணை மின் நிலையங்களை நிறுவிடவும் உரிய நிதியை உடனே ஒதுக்கிட தமிழக அரசையும், மின்வாரியத்தையும் இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

6. தமிழ்நாடு மின்வாரியத்தில் காலியாக உள்ள 2500–க்கும் மேற்பட்ட தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்களை (துவக்க நிலை பதவி), பட்டயம் படித்த பொறியாளர்களை கொண்டு உடனடியாக நேரடி நியமனம் செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வாரியத்தை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
7. விநியோக வட்டங்களில் சீரானபணிகள் தொடர்ந்திட, காலியாக உள்ள துவக்க நிலைபதவிகளான களப்பணி உதவியாளர், தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளை உடனே நேரடி நியமனம் மூலம் நிரப்பிட அரசையும் வாரியத்தையும் இப்பொதுக்குழு வலியுறுத்திகேட்டுக் கொள்கிறது.
8. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சட்டசபையில் அறிவிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டு செயல்பாட்டில் இருக்கின்ற, பதவி அனுமதிகள் வழங்கப்படாத அனைத்து துணை மின் நிலையங்களுக்கும் நடைமுறையில் உள்ள ஒப்பந்தத்தின்படி உரிய பதவிகளைஅனுமதித்திட இப்பொதுக்குழு வாரியத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
9. 14 ஆண்டுகள் ஒரே பணி நிலையில் பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் அடுத்த உயர் பதவியில் சார்பு நிலை (NI) பெயர் மாற்றம் வழங்கிட இப்பொதுக்குழு வாரியத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது
10. வாரியத்தில் 35 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் இருந்து வந்த உள்முகத் தேர்வை ரத்து செய்த வாரிய ஆணை 05, நாள்:07.06.2022ஐ திரும்பப் பெற்றிட வாரியத்தை மீண்டும் இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
11. ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொண்டபடி, வேலைப்பளுக்கான பேச்சுவார்த்தையை உடனடியாக துவக்கிட வாரியத்தை இப்பொதுக்குழு, வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
12. 01.12.2023 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வினை வழங்க, தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தையை உடனடியாக துவங்கிட வாரியத்தை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
13. மின்வாரியத்தில் 65 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருவது போல Class III & IV பணியாளர்களுடன் இணைந்து Class I & II பணியாளர்களுக்கும் நான்காண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வை வழங்கிட வாரியத்தை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
14. தமிழக அரசு அறிவிக்கும் அனைத்து நலத்திட்டங்களையும் பொதுமக்களுக்கு நேரடியாக கொண்டு செல்லும் பிரிவு பொறியாளர்கள் காலிபணியிடங்களை உடனடியாக இளநிலை பொறியாளர் /முதல் நிலைபதவி உயர்வுகள் மற்றும் உதவி பொறியாளர் உள்முகத் தேர்வு மூலம் நிரப்பிட வாரியத்தை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
15. களச் சூழ்நிலையை கருத்தில் கொள்ளாமல் வாரியத்தால் வெளியிடப்பட்ட BP–4 உள்ளிட்ட மறுசீரமைப்பு ஆணைகளை மறு ஆய்வு செய்திட வாரியத்தை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
16. பேரிடர் காலங்களிலும் இயற்கை சீற்றங்களின் போதும் நடைபெற்ற மின்விநியோகச் சீரமைப்பு பணிகளில், சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட காலச் சூழல், மின்விநியோகம் சீரமைக்கப்பட வேண்டியதன் அவசர அவசியம், பொதுமக்களின் இடர்பாடுகளை களைதல் ஆகியவற்றினை கருத்தில் கொள்ளாமல் தணிக்கை பிரிவினர் மேற்கொண்ட தணிக்கைகளை கைவிட வாரியத்தை இப்பொதுக்குழு, வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
17. மரபு எரிசக்தியை ஊக்குவிக்கும் விதமாக, வாரியப் பணியாளர் வீடுகளில் மேற்கூரை சூரியமின் சக்திதகடுகள் அமைக்க பணியாளர்களுக்கு வட்டியில்லா கடன் வழங்கிட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
18. புதிதாக உருவாக்கப்பட்ட விநியோக பிரிவுகளுக்கு பிரிவு பொறியாளர் பதவிகளை நடைமுறையில் உள்ள ஒப்பந்தத்தின் படி உடனடியாக பதவி அனுமதியளித்திட வாரியத்தை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
19. கடந்த ஆண்டு இயற்கை சீற்றத்தால் சென்னை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஏற்பட்ட பெரும் வெள்ள பாதிப்பினை இரவு பகல் பாராமல் சீரமைப்பு பணிகள் மேற்கொண்டு மின் விநியோகத்தை சீரமைத்த வாரியப் பணியாளர்கள் அனைவருக்கும் இப்பொதுக்குழு பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

# 2024-ஆம் ஆண்டின் சங்கத்தின் புதிய மையப் பொறுப்பாளர்கள்



பொா்.A.அந்தோணிபடோவராஜ்
மாநிலத் தலைவா்
9443872166



பொா்.R.சுந்தா்ராஜ்
மாநிலத் துணைத் தலைவா் மின்னியல்
9443007521



பொா்.T.சிவகீா்த்தி
மாநிலத் துணைத் தலைவா் இயந்திரவியல்
9976529161



பொா்.V.S.சம்பத்குமாா்
பொதுச் செயலாளா்
9840956783



பொா்.N.R.செந்தில்
பொதுப் பொருளாளா்
9499014992



முனைவா்.S.சம்பத்
செயலாளா் / அமைப்பு
9443114354



பொா்.V.அசோக்குமாா்
செயலாளா் / நிா்வாகம்
9443629178



பொா்.உ.ராஜேந்திரன்
செயலாளா் / வெளியீடு
9092687454



பொா்.J.கோபாலகிருஷ்ணன்
செயலாளா் / சட்டம்
9865058893



பொா்.P.M.மாரியப்பன்
செயலாளா் / தலைமையகம்
9840968445



பொா்.K.S.ரமேஷ்
செயலாளா் / அலுவலகம்
9841675100



பொா்.S.பாலாஜி
செயலாளா் / வலைதளம்
9159424298



பொா்.R.தமிழ்ச்செல்வன்
செயலாளா் / சென்னை வடக்கு மண்டலம்
9841219297



பொா்.J.வெங்கடேசன்
செயலாளா் / சென்னை தெற்கு மண்டலம்
9443638615


தமிழ்நாடு மின்சார வாரிய
பதிவு எண் : 124/MDS
56 வது மாநில
தமிழ்நாடு மின்சார வாரிய
பதிவு எண் : 124/MDS
56 வது மாநில
நாள் : 22, 23 ஜூன் 2024


பொறியாளர் சங்கம்
பொறியாளர் சங்கம்
இடம் : கன்னியாகுமரி

# 2024-ஆம் ஆண்டின் சங்கத்தின் புதிய மையப்பொறுப்பாளர்கள்



பொர்.P.கமல்குமார்
செயலாளர் / கோவை மண்டலம்
9443540879

பொர்.A.குமரேசன்
செயலாளர் / ஈரோடு மண்டலம்
9976647777





பொர்.G.கதிர்வேல்
செயலாளர் / மதுரை மண்டலம்
7639206686

பொர்.R.முருகன்
செயலாளர் / நெல்லை மண்டலம்
9486338336





பொர்.C.நரசிம்மன்
செயலாளர் / திருச்சி மண்டலம்
8903850694

பொர்.P.சுந்தர்
செயலாளர் / தஞ்சை மண்டலம்
9443827103





பொர்.K.ஆனந்தபாபு
செயலாளர் / கரூர் மண்டலம்
9750923023

பொர்.R.தணிகைசெல்வன்
செயலாளர் / வேலூர் மண்டலம்
9952189875





பொர்.C.சந்திரசேகரன்
செயலாளர்/திருவண்ணாமலை மண்டலம்
9443803221

பொர்.B.கணேசன்
செயலாளர்/விழுப்புரம் மண்டலம்
9842879143





பொர்.T.சுகுமார்
செயலாளர்/அனல் உற்பத்தி மண்டலம்
9962300507

பொர்.K.சுரேஷ்
செயலாளர்/புனல் உற்பத்தி மண்டலம்
9842747889





பொர்.R.சந்தோஷ் குமார்
செயலாளர்/காமதேனு நலநிதி
9962719617

பொர்.A.P.ராகேஷ்
பொருளாளர்/காமதேனு நலநிதி
9710328131



இந்த சீரமைப்பு பணிகள் அனைத்தும் மின்சாரவாரியம் பொதுத் துறையாக செயல்பட்டால் மட்டுமே சாத்தியம் என்பதை வாரியத்திற்கும், தமிழக அரசிற்கும் இந்நேரத்தில் சுட்டிக்காட்ட இப்பொதுக்குழு கடமைபட்டுள்ளது.

20. வாரியத்தில் நிதிநிலையை கருத்தில் கொண்டு தணிக்கை பிரிவினருக்கு வழங்கும் ஊக்கத் தொகையினை ரத்து செய்திட வாரியத்தை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
21. புதிதாக வழங்கப்படும் மின் இணைப்புகளில் மீட்டர் பழுதை முதலாவது கணக்கீட்டிலேயே LT Billing Software ல் பதிவு செய்திட மென்பொருளில் தக்கமாற்றம் செய்திட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
22. வாரியப்பணியில் இருந்து பணி ஓய்வு பெறும் வாரியப் பணியாளர்களின் ஓய்வு கால பணப்பயன்களை அவர் ஓய்வு பெற்ற உடனே வழங்கிட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
23. மின்வாரிய விநியோக வட்டங்களில் உள்ள கட்டுமான பிரிவுகளை வலுப்படுத்தி, RDSS திட்டங்களை, கட்டுமான பிரிவுகளைக் கொண்டு செயல்படுத்திட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
24. மின்னகத்திலிருந்து பெறப்படும் மின்நுகர்வோர் புகார்களை பிரிவுப் பொறியாளர்கள் மட்டுமே பார்க்கும் நிலையினை மாற்றி, மின் தடை நீக்க மையங்களுக்கு சென்றடையுமாறும், மின் தடை நீக்க மையங்கள் இல்லாத இடங்களில் பிரிவுகளில் உள்ள முகவர்களுக்கு சென்றடையும் வகையில் மென்பொருளில் தக்கமாற்றம் செய்திட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
25. அனல் மின் நிலையத்தில் உள்ள அலகு கட்டுப்பாட்டு அறை (UCB) முறைப்பணி பொறியாளர்களின் எண்ணிக்கை சமீபமாக ஐந்து நபர்களிலிருந்து நான்காக குறைக்கப்பட்டது. இதனால் அப்பொறியாளர்களுக்கு பல்வேறு இன்னல்களை ஏற்பட்டுள்ளது. களச் சூழ்நிலையை கருத்தில் கொண்டு அலகு கட்டுப்பாட்டு அறை (UCB) முறை பணிக்கு மீண்டும் ஐந்து நபர்களை அனுமதித்திட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
26. அனல் மின் நிலையங்கள் Base Load உற்பத்தியை கணக்கில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. சமீப காலமாக அனல் மின் நிலையங்களை Peak Load உற்பத்தி நிலையம் போல் பாவித்து அடிக்கடி உற்பத்தியை நிறுத்துவதும் மீண்டும் உற்பத்தியை தொடங்குவதும் (Frequent Tripping & Light up) கொதிகலன், சுழலி மற்றும் முக்கிய பாகங்களில் பழுது ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அனல் மின் நிலையத்தின் ஆயுட்காலத்தை குறைத்து மின் நிலையத்திற்கு பெரும் நஷ்டம் ஏற்பட காரணமாக அமையும். எனவே இந்த நடைமுறையை (Frequent Tripping & Light up) உடனே கைவிட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
27. பொறியாளர் சங்கத்தில் உள்ள இளையப் பொறுப்பாளர்களின் திறன் மேம்பட அவர்களுக்கான பயிற்சியினை இந்த ஆண்டில் நடத்திட இப்பொதுக்குழு முடிவெடுக்கிறது.
28. அமைப்பு ரீதியான செயல்பாடுகள் சிறக்க, மாதாந்திர செயற்குழு கூட்டங்களை கோட்டங்கள் தோறும் நடத்திடவும், காலாண்டு மண்டல கூட்டங்களை கிளைகள் தோறும் தொடர்ந்து நடத்திடவும் பொறுப்பாளர்களை இப்பொதுக்குழு, கேட்டுக்கொள்கிறது. மேலும், நிர்வாகத்துடன் திட்டமிட்ட பேச்சு வார்த்தையை சிறப்பான அணுகுமுறையோடு நடத்திட இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
29. வரும் ஆண்டு மே மாதம் உறுப்பினர்கள் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படும் ஆண்டு சந்தாவினை ரூ.300ல் இருந்து ரூ.500/–ஆக உயர்த்துவது என்று இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

பொதுக்குழு நிகழ்வில் மூத்த முன்னாள் பொறுப்பாளர்கள், தன்னார்வலர்கள், நெல்லை மண்டல பொறுப்பாளர்கள் மற்றும் அனைவரும் சங்கத்தால் கௌரவிக்கப்பட்டனர்.

பொதுக்குழுவிற்கு உதவிய அனைவருக்கும் அமைப்பு செயலாளர் முனைவர் சா.சம்பத் அவர்கள் சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவிக்க தேசிய கீதம் பாடி பொதுக்குழு நிறைவு பெற்றது.

----XXX----

**PROMOTIONS**

**TANGEDCO**
**ABSTRACT**

Administrative Branch
N.P.K.K.R.R. Maaligai
144, Anna Salai,
Chennai – 600 002.

**Letter No.027722 / G4/ G41/ 2024-2, dated 24.05.2024.**

From:
Er.R.SUNIL, B.E.,
Chief Engineer/ Personnel, (I/c)

To
All Chief Engineers,
All Superintending Engineers.

Sir/ Madam,

**Sub:** Establishment – Class III Service – Preparation of panel for the post of JE/ Electrical II Grade from the post of TA/ Electrical and Draughtsman cadre for the Crucial date 20.03.2024 – DP Particulars – Called for – Reg.

1. It is proposed a fresh panel for filling up the existing and anticipated vacancies of Junior Engineer/ Electrical II Grade from the post of Technical Assistant / Electrical and Draughtsman cadre based on the crucial date of 20.03.2024. A list of 915 Technical Assistants/ Electrical are annexed for consideration for promotion to the post of Junior Engineer/ Electrical II Grade.

.
.
.

Encl: Annexure
Format

Yours faithfully,
Sd/-***** 24.05.2024
CHIEF ENGINEER/ PERSONNEL (I/C)

ANNEXURE
(Letter No.027722 /G.4/ G.41 / 2024 -2, dated.24.05.2024

| Sl. No | Employee ID | Name | DOB | Present Circle |
|---|---|---|---|---|
| 1. | 12060259 | Palaniyappa. S | 05.07.1978 | Perambalur EDC |
| 2. | 12011523 | Ramamoorthy.M | 17.06.1964 | Krishnagiri EDC |
| | | | | ------ |
| 915 | 12003902 | Umamaheswari.M | 28.02.1981 | NCES/ Tirunelveli |

## சென்னை மையம்

சென்னை மையம் கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் 02.06.2024 அன்று பொர். N.குருராஜன், கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பொர்.V.S.சம்பத்குமார், பொதுச் செயலாளர், பொர்.G.கார்த்திகேயன், மாநில பொருளாளர், பொர்.R.தமிழ்செல்வன், சென்னை வடக்கு மண்டல செயலாளர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | Er. N.Gururajan / AEE / Shift / 230 KV SS/ Central CMRL. 9840235743. |
| துணைத் தலைவர் | : | Er. R.V.L.Rathnakumar/ AEE / Enforcement/ 96001 76668 |
| செயலாளர் | : | Er. A.P.Rakesh/ JE / Mtce. / 230 KV SS/ TNEB Head Quarters. 9710328131. |
| இணைச் செயலாளர் | : | Er. N.Raguraman/ AEE(NI)/ Mech. / BBGTPS.9840647097. |
| அமைப்புச் செயலாளர் | : | Er. P.Chellapandi/ AEE / O&M /Pulianthope.9442316179. |
| பொருளாளர் | : | Er. S.Ganapathi Sundaresan / JE / Mtce. / 110 KV SS/ Nandanam. 9840979877. |
| பொதுக்குழு உறுப்பினர் | : | Er. V.S.Sampath Kumar/ JE / Mtce. / 230KV GIS SS/ Mylapore. 9840956783. |
| | : | Er. R.Tamilselvan, AEE/ O&M /Kilpauk. 9841219297 |

## சென்னை வளர்ச்சி வட்டம்

சென்னை வளர்ச்சி வட்டம் கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் 08.06.2024 அன்று பொர்.S.ஜெயக்குமார், கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பொர்.G.கார்த்திகேயன், மாநில பொருளாளர், பொர்.R.தமிழ்செல்வன், சென்னை வடக்கு மண்டல செயலாளர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | Er. S.Jayakumar, AEE / EBS / CDC, 7010007678. |
| துணைத் தலைவர் | : | Er. J.Selvaraj, JE/Mobile 8/ EBS / CDC. 9444949764 |
| செயலாளர் | : | Er. U.Rajendran, JE / Elec.Mtce.3/ BD/ CDC. 9092687454 |
| இணைச் செயலாளர் | : | Er. C.Anandhan, JE/EBS/CDC. 9841178123. |
| அமைப்புச் செயலாளர் | : | Er. D.Palani, AE/SSE/Chennai/ GCC - 1. 9444507716. |
| பொருளாளர் | : | Er. A.Manivannan, JE / Control centre / EBS. 82204 57412. |
| பொதுக்குழு உறுப்பினர் | : | Er. N.R.Senthil, JE / Elec.Mtce.2/ BD/ CDC. 9499014992. |

## உடுமலைப்பேட்டை

உடுமலைப்பேட்டை கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் 06.06.2024 அன்று பொர்.A.செந்தில்ரமேஷ், கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பொர்.A.அந்தோணிபடோவராஜ் மாநில தலைவர், பொர்.C.சிவசங்கரன், கோவை மண்டல செயலாளர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | Er. A.Senthil Ramesh/ EE/O/Ponnapuram. 9080967739 |
| துணைத் தலைவர் | : | Er. K.Balasubramaniam/ EE / Operation / Udumalpet. 9865853565 |
| செயலாளர் | : | Er. S.Jaikumar/ AEE / P&C/ Udumalpet. 9894177707 |
| இணைச் செயலாளர் | : | Er.T.Chenthilkumar/ AEE / NABL/ Udumalpet. 9486337913 |
| அமைப்புச் செயலாளர் | : | Er.C.Kumar/ AEE / O&M / Pethapampatty. 8883050000 |
| பொருளாளர் | : | Er. S. Gopal/ AE / MRT/ Udumalpet. 9443361309. |

## சென்னை வடக்கு

சென்னை வடக்கு கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் 09.06.2024 அன்று பொர்.P.மனோகரன், கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பொர்.G.கார்த்திகேயன், மாநில பொருளாளர், பொர்.R.சந்தோஷ்குமார், மின் அலை செயலாளர் வெளியீடு மற்றும் பொர்.N.R.செந்தில், காமதேனு நலநிதி செயலாளர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | Er. P.Manoharan, AE/ Madhavaram.8838761117 |
| துணைத் தலைவர் | : | Er. S.Sugumar, AE/Poovalmbedu.8940449568 |
| செயலாளர் | : | Er.P.M.Mariyappan, AEE/Technical/ O/o CE/D/ Chennai North Region.9840968445. |

| | | |
|---|---|---|
| இணைச் செயலாளர் | : | Er. M.Suresh Babu/ TA/33/11KV Tolgate SS/ 9444716114 |
| அமைப்புச் செயலாளர் | : | Er. V.Lingasen/ AE/Napalayam/ 97909 67488 |
| பொருளாளர் | : | Er. S.Amarnath/ TA/33/11KV SS/ Kaladipet. 9677050949 |
| பொதுக்குழு உறுப்பினர் | : | Er. C.Appan Srinivasan / AEE/Mtce. /110KV SS/ RK NAGAR 9080326638 |
| | | Er. E.Anandhan/ AEE Mtce. / 765 KV North Chennai Pooling Station/ |

## சென்னை தலைமையகம்

சென்னை தலைமையகம் கிளையின் ஆண்டு பேரவை கூட்டம் 16.06.2024 அன்று பொர்.R.ஆதிமூலம், கிளைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பொர்.G.கார்த்திகேயன், மாநில பொருளாளர், பொர்.N.R.செந்தில், காமதேனு நலநிதி செயலாளர் மற்றும் பொர்.R.தமிழ்செல்வன், சென்னை வடக்கு மண்டல செயலாளர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | Er. G.Periyasamy, AEE/ RAPDRP.9095490092 |
| துணைத் தலைவர் | : | Er. K.R.Mohan Kumar, AEE/ LD&GO. 9148815550 |
| செயலாளர் | : | Er. R.Santhoshkumar, AEE-2/CC/Mtce. O/o CE/IT. 9962719617 |
| இணைச் செயலாளர் | : | Er. M.Guhan, Sr.Manager-3/ STC, 9445367882 |
| அமைப்புச் செயலாளர் | : | Er. R.Ramkey, JE-II/ P&C/ Guindy, 8148869799 |
| பொருளாளர் | : | Er. K.Raguvaran, TA/ SCADA. 9444622193 |
| பொதுக்குழு உறுப்பினர் | : | Er. S.Balaji, JE/ Scheduling/ SLDC. 9159424298 |
| | | Er. K.S.Ramesh, JE/ IT, 9841695100 |

## கரூர் கிளை

கரூர் கிளையின் 2024 ம் ஆண்டு பேரவை கூட்டம் 20.06.2024 அன்று பொர்.G.கோபி, கிளைத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பொர்.A.அந்தோணி படோவராஜ், மாநில தலைவர் அவர்கள் மற்றும் பொர்.K.ஆனந்தபாபு, செயலாளர்/ கரூர் மண்டலம் அவர்கள் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

**கீழ்காணும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.**

| | | |
|---|---|---|
| கிளைத் தலைவர். | : | பொர்.M.முருகன், இ.நி.பொ/அர்பன்/வடக்கு/ கரூர், 9976094981 |
| துணைத்தலைவர். | : | பொர்.A.ராமகிருஷ்ணன், உ.பொ/ராயனூர், 8883184583 |
| கிளைச் செயலாளர். | : | பொர்.G.கோபி, உ.பொ/புலியூர்/மேற்கு, 9942024610 |
| இணைச் செயலாளர். | : | பொர்.R.செந்தில்குமார், இ.நி.பொ/காந்திகிராம், 9442816398 |
| அமைப்புச் செயலாளர். | : | பொர்.R.மோகன், உ.பொ/தான்தோணிமலை, 9442375286 |
| கிளைப் பொருளாளர். | : | பொர்.B.சுரேஷ், இ.நி.பொ/ வெங்கமேடு, 9787316051. |

" The reasonable man adapts himself to the world;
The unreasonable one persists to adapt the world to himself.
Therefore all progress depends on the unreasonable man."
- George Bernard Shaw

# மாறுவோம் மாற்றுவோம் ..!?

–முனைவர்.சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
மாநில அமைப்பு செயலாளர்

"மாற்றங்கள் ஒன்றே மாறாதது" என்பது வெற்றியாளர்களின் மந்திரச்சொல்.

எந்த துறையிலும் வெற்றி பெற்றவர்கள் நம்பிய மந்திரச் சொல் இதுதான். மாறி வரும் சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொண்டு, மேம்படுத்திக் கொண்டு, சூழலுக்கு பொருந்தி வாழ்கிறவர்களே வெற்றி பெறுகிறார்கள். விடாபிடியாக மாறாதவர்கள் காலத்தின் எதிர் சூழலில் சிக்கி காணாமல் போகிறார்கள் என்பது உண்மை.

இன்றைக்கு இந்த உலகில் வாழும், நிலைத்து நிற்கும் எந்த உயிரும், இனமும், மொழியும், நிறுவனமும், படைப்புகளும் சூழ்நிலைக்கு தகுந்தாற் போல் தன்னை மாற்றிக் கொண்டவைகளே. உதாரணமாக தன்னை மாற்றிக் கொள்ளாத எத்தனையோ மொழிகள் அழிந்து போக, உலகின் ஆதி மொழியாம் நம் தமிழ் மொழி நிலைத்து செம்மொழியாக இன்று கணினிக்கும் ஏற்ற மொழியாக இருப்பதன் காரணம், மாற்றங்களை உள் வாங்கி தன்னை மெறுகேற்றி கொண்டதால்தான்.

பதவி உயர்வு பெற்ற நீங்களும் மாற்றங்களுக்கு உட்பட்டு உங்களை கூர்படுத்திக்கொண்டால் (Update) மட்டுமே, ஒரு பிரிவுப் பொறியாளராக, மற்ற உயர் நிலை பொறியாளராக வெற்றி பெற முடியும். பொறியாளர் என்கிற நிலையில் இருந்து நீங்கள் எப்போது தொழில்நுட்ப மேலாளர் ஆகும் போது மட்டுமே, இன்றைய வாரிய மாற்றத்தினை எதிர்கொண்டு வெல்லமுடியும். அதற்கு, ஒவ்வொரு நாளும் மாறிவரும் வாரிய சூழலை எதிர்கொண்டு தன்னை மேம்படுத்தி கொள்வது அவசியம். மேலும் நுகர்வோர்களையும், சக தொழிலாளர்களையும், அதிகாரிகளையும் திறம்பட எதிர்கொண்டு கையாளுவதில் தான் உங்கள் ஆளுமை இருக்க வேண்டும்.

ஒரு பிரிவு பொறியாளருக்கு பொறியியல் அறிவு மட்டும் இருந்தால் போதும் என்கிற நிலை மாற ஆரம்பித்துள்ளது. இப்போது பொறியாளர்கள் மேலாளராக, கணக்கு வல்லுனர்களாக மனித வள மேலாண்மை தெரிந்தவராக, குறைவான செலவில் நிறைய இலாபம் ஈட்டும் அலுவலராக, பிரச்சினைகளை நேர் மறை சிந்தனை மூலம் தீர்க்க கூடியவராக, நுகர்வோர் தோழனாக, எதனையும் எதிர்கொள்ளும் மனோபாவம் கொண்டவராக இருக்க வேண்டியது இப்போதைய அவசியமாகிறது.

இன்று பிரிவுப் பொறியாளர்களில் பேறுபெற்றவர்கள் எல்லாம், பிரச்சினைக்குள் வாய்ப்பினை பார்த்தவர்களே. இதுவெல்லாம் கிடைத்தால் நான் சந்தோஷப்படுவேன் என்பவர்கள், அவைகள் கிடைத்தபோது சந்தோஷமாக இருந்ததாக தெரியவில்லை, அவர்கள் மனம் வேறு இல்லாததை தேட ஆரம்பித்து விடும். எனவே எது இருக்கிறதோ அது சந்தோஷம் என்று நினைத்தால் எந்த சூழ்நிலையையும் சமாளிக்க முடியும். உதாரணமாக ஒரு பிரிவில் 3M என்று சொல்லக்கூடிய Men, Material, Money இவைகள் தட்டுப்பாடின்றி கிடைத்துவிட்டால் பணி செய்வது எளிது என்று நினைக்கிறோம். ஆனால் எந்த ஒரு பொதுத்துறை நிறுவனங்களிலும் இது சாத்தியமில்லை, குறிப்பாக மின் துறையில் இது சாத்தியமில்லை. வாரியம் துவங்கிய நாளில் இருந்தே இவைகள் தட்டுப்பாடின்றி ஒரு சேர கிடைத்ததில்லை.


ஆனால் எல்லா பணிகளும் முடிக்கப்பட்டு இருக்கின்றன. காரணம் நம் பொறியாளர்களின் மனோபாவம் மற்றும் தொழிலாளர்கள் திறமை ஆகியன ஆகும்.

ஒரு பொறியாளன் தன் பணியில் எப்படி சிறக்க முடியும் என்பதை ASK ( Attitude, Skill, Knowledge) என்ற முக்கோண தத்துவம் விளக்குகிறது.

**Attitude** என்பது நம்முடைய நேர்மறை மனோபாவம். நிகழ்காலத்தில் ஏற்படும் பல சிக்கல்களை தீர்க்க உதவும் கருவி. எதிர்மறை சிந்தனைகளை மாற்றி, தற்போது எடுக்க வேண்டிய பொருத்தமான முடிவுகளை எடுக்க உதவும் அடிப்படை ஆதாரம்.

**Skills** என்பது நம் திறமை நம்முடைய முயற்சியால் நாம் பெறும் பயிற்சியால் நம்மை நாமே வளர்த்துக் கொள்ளும் ஆற்றல். (இன்றைய வாரிய புதிய நடைமுறைகள் மற்றும் செயலிகளில் நம் திறமையை மேம்படுத்தி கொள்வது)

**Knowledge** என்பது அறிவு நாம் கற்ற கல்வி, படித்த புத்தகங்கள் மூலம் நாம் பெற்ற அறிவு.




என்னால் சிறந்த பொறியாளராக பணியாற்ற முடியும் என்கிற நேர்மறை மனோபாவம் (Positive Attitude) வந்து விட்டால், நாம் பெற்ற கல்வியை (Knowledge) கொண்டு, நம் திறமையை (skills) வளர்த்துக் கொள்ள முடியும். பிறகு நாம் கையாளும் பிரச்சனைகள் நம் சொல் கேட்கும், நம் மேலதிகாரிகள் நம் மீது நம்பிக்கை வைப்பார்கள், நம்மிடம் பணிபுரியும் ஊழியர்கள் நமக்கு கட்டுப்படுவார்கள்.

எந்த மாற்றத்தையும் நாம் வெல்லமுடியும்.
காரணம் “நம்பிக்கையே” வாழ்க்கை.

> Be the change you wish to see in the world.
> - Mahatma Gandhi

## பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்

கீழ்க்கண்ட பொறியாளர்கள் 30.04.2024 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். அவர்களை பொறியாளர் சங்கம் நீண்ட ஆயுள், நல்ல உடல்நலம், நிறைந்த மனநிம்மதியுடன் வாழ வாழ்த்தி மகிழ்கிறது.

1. Er.N.Raman, AEE / Mtce. / 110KV Grid SS / Sivagangai, Former GCM / Sivagangai Branch. 9442051126.
2. Er.J.Ramachandaran, JE1 / M / O&E / NCTPS1, Former GCM/ NCTPS Branch. 99623 22884.
3. Er.L.Muthukumaran, JE1 / 110KV SS Mtce. / Pakkam, Former GCM / Thirupathur Branch. 6380375797.
4. Er.A.Veerappan , JE1 / Elec./ Sarkarpathi PH, Former VP / Kadamparai Branch. 94434 02075.
5. Er.K.Elangovan, JE1 / O&M / West / Thuraiyur, Former Div.Secy. / Trichy Branch. 9994730911.
6. Er.R.Sathyanarayanan, SE / ES / NCTPS1, NCTPS Branch. 94450 28590.
7. Er.M.Gopal, SE / Mech. / M1 Circle, TTPS Branch. 9445522278.
8. Er.MK.Rajendran, EE / TGM & CA / MTPS2, MTPS Branch. 93600 39105.
9. Er.G.Paneerselvam, EE / O&M / Kulithalai, Karur Branch. 7010658838.
10. Er.N.Ravichandran, EE / O&M / Maraimalainagar, Chengalpattu Branch.9500141514.
11. Er.K.Sekar, EE / General / Perambalur, Perambalur Branch. 97893 32850.
12. Er.P.Ambethkar, AEE / O&E / MTPS2, MTPS Branch.77084 96773.
13. Er.S.Chandrasekaran, AEE /Elec. / EM 3, TTPS Branch. 9994636802.
14. Er.D.Pushparaj, AEE / Shift / Kilpauk 230 KV SS, Chennai West Branch.9840784528.
15. Er.R.Balasubramanian, AEE/ Mtce./ 110 KV Trichy Grid SS, Trichy Branch. 9442869213.
16. Er.K.Nagarajan, AEE / MRT / Pudukkottai, Pudukkottai Branch. 9442424296.
17. Er.G.Krishnamoorthy, AEE / O&M / West / Vellore, Vellore Branch. 98435 14297.
18. Er.S.Navaneethan, AEE / Shift / 230 KV SS / Renganathapuram, Dindigul Branch. 7871419171.
19. Er.S.Pitchai, AEE / Guziliyamparai, Dindigul Branch.98425 92641.
20. Er.K.Sivaraman, AEE/ O&M / Selaiyur, Chennai South Branch. 90032 66789.
21. Er.S.Kalyanasundaram, AEE / C&I / KGTPS / Kutthalam, Nagai Branch. 9443517440.
22. Er.R.LakshmiNarayanan, AEE / C&I / KGTPS / Kutthalam, Nagai Branch.9443414129.
23. Er.R.Saravanan, AEE / 230KV SS / Thingalure, Erode Branch. 9750462549.
24. Er.N.Udaya Sooriyan, AEE / O&M / Thiruvottiyur, Chennai North Branch. 8122523509.
25. Er.M.Parthiban, AEE / Shift / 230 KV ETPS Switch yard, Chennai North Branch. 6374851498.
26. Er.M.Selvaraj, AEE / MM / Chengalpattu, Chengalpattu Branch. 9994527918.
27. Er.S.Sangiliraj, AEE / Shift / 230 KV SS / Kavanur, Ramnad Branch. 7339587750.
28. Er.K.Pandiyarajan, AEE / O&M / Vembakkam, Thiruvannamalai Branch.9791542493.
29. Er.V.Paneerselvam, AEE / Shift / 230 KV Anuppankulam SS, Virudhunagar Branch. 9994507369.
30. Er.G.Balasubramaniyan, AEE / O&M / Royapetah, Chennai Central Branch. 9791182530.
31. Er.M.P.Baskar, AEE / Shift / 230 KV Basin Bridge SS, Chennai Central Branch. 9884856660.
32. Er.M.Thiagarajan, AEE / E / EM2 / NCTPS2, NCTPS Branch.89733 03420.

33. Er.A.Muniappan, AEE (NI) / 110KV SS / Kavandhapadi, Erode Branch.6380448986.
34. Er.S.Soundararajan, AE / Lines1 / Villupuram, Villupuram Branch. 9442736860.
35. Er.S.Pandiyan, AE / O&M / South Valapady, Salem Branch. 8148487577.
36. Er.R.Dharmar, JE1 / Shift / 110 KV Metro Zone GIS SS, Chennai West Branch. 9444606605.
37. Er.V.Mahalingam , JE1 / O&M / Aravakuruchi, Karur Branch. 7397070815.
38. Er.S.Ravichandran, JE1 / Mtce. / 110KV SS / Okkanadu Keelaiyur, Thanjavur Branch.8270656205.
39. Er.A.Johnson, JE1 / Construction / Ponneri, Chennai North Branch. 8668170494.
40. Er.M.Karuppiah, JE1 / Cables / CDC, CDC Branch. 7395949907.
41. Er.J.Kumar, JE1 / E / O&E / NCTPS2, NCTPS Branch. 94431 13110.
42. Er.N.Karunanidhi, JE1 / O&M / Ammaiyarkuppam, Kanchipuram Branch. 8072175514.

**VOLUNTARY RETIREMENT**

1. Er. A.Saleem Basha, AEE / Cables / Coimbatore Metro, Former Div. Secy. / MTPS Coimbatore Branch. 9952584210.
2. Er. V.Nandakumar, AEE / Enforcement, Head Quarters Branch. 9600041315.
3. Er.K.Sivakumar, JE / SSE / Thiruvannamalai, Thiruvannamalai Branch. 9789300014.

# கண்ணீர் அஞ்சலி

**பொறியாளர்கள்**

1. 04.06.2024 பொர்.J.ஹென்றி வில்ஸ், இளநிலைப் பொறியாளர்/ பேரளம் துணை மின் நிலையம்/ திருவாரூர் கிளை **அவர்கள்.**
2. 06.06.2024 பொர்.அந்தோணி சவரிமுத்து, இளநிலை பொறியாளர்/ பராமரிப்பு தண்ணீர் பந்தல் / ஈரோடு கிளை **அவர்கள்.**
3. 07.06.2024 பொர்.N.அழகேசன், உதவிப் பொறியாளர் / முகலிவாக்கம்/ சென்னை தெற்கு கிளை **அவர்கள்.**

பொறியாளர்களின் மறைவிற்கு பொறியாளர் சங்கம் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது. பொறியாளரை இழந்து வாடும் குடும்பத்திற்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

**பொறியாளர் குடும்பத்தினர்**

1. 27.05.2024 பொர்.குமரவேல், இளமின் பொறியாளர்–2/ நம்பியூர் துணை மின் நிலையம் / கோபி கிளை அவர்களின் **தந்தையார்** அவர்கள்.
2. 27.05.2024 பொர்.M.கோவிந்தராஜன், உதவி செயற் பொறியாளர் / 230 கடலங்குடி துணை மின் நிலையம், நாகை கிளை அவர்களின் **தாயார்** அவர்கள் – 9442242520.
3. 27.05.2024 பொர்.A.முரளி, உதவிப் பொறியாளர் / O&M/ ஆண்டார்குப்பம் அவர்களின் **தாயார்** அவர்கள் – 9994746001.
4. 12.06.2024 பொர்.M.சேகர், உதவி செயற் பொறியாளர் மின்னியல் / EM–1/வடசென்னை அனல் மின் நிலையம் – 1 அவர்களின் **தந்தையார்** அவர்கள் – 9445375682.
5. 16.06.2024 பொர். C.சொக்கலிங்கம், உதவி செயற்பொறியாளர்/ MRT/ கோபி அவர்களின் **தந்தையார்** அவர்கள்.
6. 17.06.2024 பொர்.G.பசுபதீஸ்வரன், செயற் பொறியாளர்/ அர்பன்/ கோயம்பத்தூர் மெட்ரோ அவர்களின் **தந்தையார்** அவர்கள் – 9789489808

ஆகியோர் இயற்கை எய்தினார்கள்,

குடும்பத்தினரை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

# கிளை பேரவை கூட்டங்கள்






Chennai Central - 02.06.2024






CDC Chennai - 08.06.2024






Chennai North - 09.06.2024

## கிளை பேரவை கூட்டங்கள்






Head Quarters - 16.06.2024




Karur - 20.06.2024



Udumalaipettai - 01.06.2024



Chennai Central - 02.06.2024



KBF (VI) scheme amount of Rs.3,10,000/- to deceased Er.D.Indiraraj/AEE (NI) / MTPS was settled to his family on 01.06.2024.



Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079.
Edited by : U.Rajendran, Publication Secretary, TNEB Engineers' Sangam